# உதயன்

விலை ரூபா 6.00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஐப்பசி 03 சனிக்கிழமை (19-10-1996) UTHAYAN A Liveyl Nationel Tamil Da ily கதிர் 245


## அண்மையிலுள்ள ராணுவ முகாமுக்கு சென்று எவரும் ராணுவத்தில் சேரலாம்

### இராணுவத் தளபதியின் புதிய திட்டம்

''உண்மை வெற்றி'' இராணுவ நடைவடிக்கையின் போது மீட்கப்பட்ட கிளிநொச்சிப் பிரதேசத்தைப் பாதுகாப்பதற்கு இராணுவத்துக்கு மேலும் 15 ஆயிரம் படையினர் தேவைப்படுவதாகவும்—

இவர்களைச் சேர்க்க இராணுவத் தளபதி ரோஹான் தலுவத்த புதிய திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளார் என்றும்— அரசு சார்பு பத்திரிகையான ''தினமின'' செய்தி வெளியிட்டுள்ளது.

இத் திட்டத்தின்படி 18 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட எவரும் அண்மையிலுள்ள இராணுவ முகாமுக்குச் சென்று இராணுவத்தில் சேர்ந்து கொள்ளலாம்.

விடுவிக்கப்பட்ட பிரதேசங்களைப் பாதுகாப்பதற்காக புதிதாக இராணுவத்தில் சேரும் இளைஞர், யுவதிகளுக்கு ஜனாதிபதியின் விசேட பணிப்பின் பேரில் பல சிறப்புச் சலுகைகளை வழங்க அரசு தீர்மானித்துள்ளது எனவும் 'தினமின' தெரிவிக்கிறது. (இ-10)

## சிவராத்திரி, ஹஜ் விடுமுறை ரத்தை எதிர்த்து வழக்கு

கொழும்பு, ஒக். 19

இந்துக்களின் புனித நாள்களில் ஒன்றான சிவராத்திரி தினத்திலும் —

முஸ்லிம்களின் புனித நாளான ஹஜ் பெருநாள் தினத்திலும் — பாரம்பரியமாக வழங்கப்பட்டுவந்த அரசாங்க விடுமுறைகளை ரத்துச் செய்திருக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கையை ஆட்சேபித்து இரு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நீதிமன்றத்தில் தனித்தனியாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை சட்டக் கல்லூரியில் பயிலும் இந்து மாணவன் ஒருவரும், முஸ்லிம் மாணவன் ஒருவருமே இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த இரு தினங்களையும் விடுமுறைத் தினங்களாக அறிவிக்குமாறு உத்தரவிடுமாறு இந்த மனுக்களில் கோரப்பட்டுள்ளது.

இம்மனுக்களை நேற்று முன்தினம் பரிசீலனைக்கு எடுத்த பிரதம நீதியரசர் ஜி.பி.எஸ்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# இனவாதப் போரை நிறுத்தக் கோரி கொழும்பில் பெண்கள் ஆர்ப்பாட்டம்

## கௌரவமான தீர்வு காண வற்புறுத்து

கொழும்பு, ஒக்ரோபர். 19

வடக்கு — கிழக்கில் நடைபெற்று வரும் இனவாதப் போரை உடன் நிறுத்துமாறு கோரி கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தில் நேற்று கறுப்பு உடை அணிந்த பெண்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். சமாதானத்தை நோக்கமாகக் கொண்ட "ஸ்கிறீன்" என்ற அமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தது.

அரசியல் தீர்வு ஒன்றை எட்டும் வாய்ப்புக்கள் அனைத்தையும் ஒரு புறந் தள்ளி விட்டு ஒரு நாட்டில் இரு இனங்களுக்கும் இடையில் நடைபெறும் யுத்தத்தைத் தீவிரப்படுத்தும் நோக்கில் அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை முற்றாக நிராகரிப்பதாக ''ஸ்கிறீன்'' அமைப்பின் தொடர்பாளர் மங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பகுதியில் அடிக்கடி பறக்கும் மர்ம விமானம்

கடந்த சில நாள்களாக வன்னிப் பகுதி வான் வெளியில் இரவு நேரங்களில் மிக மர்மமான முறையில் விமானம் ஒன்று அடிக்கடி பறந்து திரிவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விமானம் நோட்டமிட்டுச் சென்றதும் ஆனையிறவு, கிளிநொச்சிப் பகுதிகளில் இருந்து ஷெல் சத்தங்கள் கேட்பதாகவும்—

வன்னியில் உள்ள புலிகளின் நிலைகளை உளவு பார்க்கும் விமானமாக இது இருக்கலாம் என்று விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் — அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய விமானங்களை 'ரிமோட்' கொன்ரோல் மூலம் இயக்க முடியும் என்றும்—

இஸ்ரேல் நாடு இது போன்ற உளவு விமானங்களைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது என்றும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## இராணுவத்தினரின் ஒழுங்கீனங்கள் பொறுத்துக் கொள்ளப்பட மாட்டாது

### மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உறுதி

யாழ்ப்பாணம், ஒக். 19

இராணுவ வீரர்கள் மத்தியில் எந்தவிதமான ஒழுங்கீனத்தையும் கெட்ட நடத்தையையும் நான் பொறுத்துக் கொள்ளமாட்டேன் —

பொதுமக்கள் தங்களுக்கு ஏற்படும் எந்த வகையான தொந்தரவு குறித்தும் என்னிடம் முறைப்பாடு செய்யலாம். அவற்றுக்கு உடனடி நடவடிக்கை எடுக்க நான் எதுவித தயக்கமும் காட்ட மாட்டேன்.

இவ்வாறு யாழ். தளபதி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா தெரிவித்துள்ளார்.

உரும்பிராயைச் சேர்ந்த ரஜினி வேலாயுதபிள்ளையின் மர்ம மரணம் குறித்து —

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவினர் மேஜர் ஜெனரலிடம் பிரஸ்தாபித்தபோதே — அவர் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

இராணுவத் தரப்பில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவு முகாமில் நடந்தது என்ன?

தணிக்கை நீக்கப்பட்ட பின்னர் வெளியான தகவல்கள் அடங்கிய

**கட்டுரைத் தொடர்**

நாளைய (ஞாயிறு)

'உதயனில்' ஆரம்பம்

## மண்எண்ணெய் இறக்கும் பணி துரிதமாக நடக்கிறது

யாழ்ப்பாணம் ஒக். 19

காங்கேசன்துறை வந்துள்ள ''சில்க்றூட்'' கப்பலில் இருந்து மண்எண்ணெய் இறக்கும் பணி துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள 5 லட்சம் லீற்றர் மண்எண்ணெயில் நேற்று வரை ஒரு லட்சம் லீற்றர் இறக்கப்பட்டுள்ளது.

இறக்கப்பட்ட மண்எண்ணெய் பவுசர்கள் மூலம் எடுத்துவரப்பட்டு முகவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

5 நாள்களில் கப்பலில் இருந்து மண்எண்ணெய் இறக்கி முடிக்கப்பட்டுவிடும் என எதிர்பார்ப்பதாக பெற்றோலியம் கூட்டுத்தாபன வடபிராந்திய முகாமையாளர் திரு. எஸ். சிவஞானம் தெரிவித்தார்.

இதுபோன்று துரிதமாக இறக்கமுடியுமானால் மாதத்தில் 3 தடவைகள் மண்எண்ணெயை எடுத்து வரமுடியும் என்றும் —

அதன் மூலம் குடாநாட்டின் தேவையை ஓரளவு சமாளிக்க முடியும் என எதிர்பார்ப்பதாகவும் — அவர் கூறினார்.

## காணாமற் போன துணை அதிபர் பற்றி கல்வி அமைச்சருக்கு முறையீடு

கொழும்பு, ஒக். 19

தனது மகளைத் தேடிச் சென்ற போது காணாமற் போன கைதடி முத்துக்குமாரசுவாமி மாகவித்தியாலயத்தின் துணை அதிபரான இராசம்மா குமாரசுவாமியை கண்டுபிடிக்க உதவுமாறு அந்த வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரியாலைக்கும் கைதடிக்கும் இடையில் காணாமற் போன தனது மகள் இருவரைத் தியை தேடிச் சென்ற சமயம் இவரும் இவரது மற்றொரு மகனும், உதவிக்குச் சென்ற அயலவர் ஒருவரும் காணாமற்போனது தெரிந்ததே.

38 வருடத்துக்கு மேலாக ஆசிரிய சேவையில் அர்ப்பணிப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். சத்திரத்துச் சந்தியில் கிரெனேட் குண்டு வெடிப்பு

யாழ்ப்பணம், ஒக். 19

யாழ்ப்பாணம், சத்திரத்துச் சந்தியில் நேற்று இடம்பெற்ற கிரெனேட் குண்டு வெடிப்பில் ஒரு பொலீஸார் உட்பட 12பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்றது.

கொட்டடியைச் சேர்ந்த ஸ்ரீபத்மநாதன் ராஜ்குமார் (வயது 23), மானிப்பாயைச் சேர்ந்த நடராசா நவராசா (வயது 46), கந்தரோடையைச் சேர்ந்த சிவசேகரம் சாஜீஸ்வரன் (வயது 21), சுன்னாகத்தைச் சேர்ந்த சண்முகசுந்தரம் சிவரூபன் (வயது 18), கருணாகரன் பிரகாஷ் (வயது 16), சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த அருளம்பலம் சரவணன் (வயது 51), கோண்டாவிலைச் சேர்ந்த கருணானந்தசிவம் குமாரசேகர் (வயது 54), குருநகரைச் சேர்ந்த தம்பிராசா

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

தென்மட்டுவில் வேரற்கேணி

## ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோவில்

## கேதார கௌரி விரத விழா

பக்தர்களே!

எதிர்வரும் 21 - 10 - 1996 திங்கட்கிழமை விஜய தசமி அன்று கேதார கௌரி பூஜை ஆரம்பிக்கும். தினமும் மாலை 2 - 30 மணி முதல் கௌரி அம்பிகைக்கும் கேதார கௌரி நாதராகிய சிவனுக்கும் விசேட பூஜை நிகழும்.

கேதார கௌரி விரதம் அனுஷ்டிப்போர் ஆலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

அனைவரும் வருக; அவனருள் பெறுக.

பிரதமகுரு.

(8927)



## காணி விற்பனை தொடர்பான அறிவித்தல்

17 - 08 - 1996 அன்று காணி விற்பனை தொடர்பாக என்னால் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிட்ட காணியை நான் தற்போது விற்கவில்லை என்றும், இது தொடர்பாக எவரும் என்னுடன் தொடர்பு கொள்ள வேண்டாமென்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

பொ. அருந்தவமலர்

கிராம்புவில்,
1ஆம் கட்டை வீதி,
சாவகச்சேரி.

(43222)



## MAJURI HOME SCIENCE ACADEMY

Navalar Road, Anaipanthy, Jaffna.

### மனையியல் டிப்ளோமா

வகுப்புகள் ஆரம்பம்

**21-10-1996** திங்கட்கிழமை
(விஜயதசமி அன்று)
காலை **9-00** மணி

★ கேக் ஐசிங் ★ சமையற்கலை
★ தையற்கலை ★ பூ வேலை
★ தலையலங்காரம் ★ கைப்பணி வேலைகள்
★ கோலம் போடுதல்

குறிப்பு: மேற்படி வகுப்புகள் 6 மாதங்களில் கற்பிக்கப்பட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:

### NEW NAVALAR EDUCATION CENTRE

Navalar Road, Anaipanthy, Jaffna.

(43239)


## ஆறு மாத நிறைவில் ஆறாத் துயரில் ....



உதிப்பு: 21 — 12 — 1962

அழிப்பு: 19 — 04 — 1996

### றெறன்ஸ் யோகேஸ்வரி

(செல்லமணி)

அன்பின் வட்டத்தை அறுத்து 'ஷெல்' லது
பண்பு மணி செல்லாவின் பாசம் விட்டுச் செல்லாது
இன்பத்தின் வழிதேடி இனி எங்கு செல்வது?
துன்பத்தை ஏன் தந்தாய் இறைவா நீ சொல்லது!
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன் பிரிவால் துயருறும்,

கணவன், பிள்ளைகள், தாய்
சகோதரர், உறவினர்.

26, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(8928)

## சமய நந்திகளில்

வட்டுக்கோட்டை இத்தியடி அருள்மிகு விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மு.ப. 10 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் உள்ள சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் இடம்பெறும்.

மகா கும்பாபிஷேகத்தை ஒட்டிய கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகும். (அ)

### அதிதீவிர சிகிச்சைப்பிரிவு

யாழ்ப்பாணம் ஒக். 19

யாழ். போதனா வைத்திய சாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு மீண்டும் பழைய இடத்தில் நேற்று முதல் இயங்க ஆரம்பித்தது. (இ-15)

### நவராத்திரி விழாக்கள்

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினர் நடத்தும் கலைமகள் விழாவும், பரிசளிப்பும் நாளை மறுதினம் திங்கட்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் மு. ப. 9 மணிக்கு நடைபெறும்.

யாழ் மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

கடந்த ஆண்டு சைவசமய விவகாரக் குழுவினால் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் முதல் இடத்தைப் பெற்ற செல்வி தாரணி ரஞ்சனின் திருமுறைப்பாடல், ''சமய அறிவுப் போட்டி— ஒரு நோக்கு'' என்பது குறித்து இணுவில் மத்திய கல்லூரி அதிபர் திரு. மு திருஞானசம்பந்தபிள்ளையின் சிறப்புரை என்பன இடம் பெறும.

இவ்வருடம் நடத்தப்பட்ட சைவசமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் விழாவில் இடம்பெறும் (அ-111)

★ ★ ★

யாழ் அரசடி வீதி, ஞானக் குழந்தை இல்ல பாலர் பாடசாலை நவராத்திரி விழா இன்று சனிக்கிழமை மு ப. 9 மணிக்கு பாலர் பாடசாலை பிரதம ஆசிரியை செல்வி இரா. சிவமனோகரி தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

விழாவில் பிரதம விருந்தினராக பாலர் கல்விக் கழகச் செயலாளர் திருமதி தெ. இரத்தினகோபால் கலந்து கொள்வார். மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (அ-4)

★ ★ ★

நெடுந்தீவு மகா வித்தியாலய இந்து இளைஞர் மன்றத்தினர் நடத்தும் நவராத்திரி விழா வித்தியாலய இந்து ஆராதனை மண்டபத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறும். (அ-111)


### பிரத்தியேக வகுப்புகள்

றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.
சென். ஜோண் பொஸ்கோ
முன்பாக.

**Spoken English With Grammer by BRITTO**

பிரிவு — II
19.10.96
4.15 — 5.30

(43238)



## இளங்கலைஞர் மன்றம்,

இலங்கை.

' கலையின்பமே நிலையின்பமாம்.''

### வாணிவழிபாடும் வித்தியாரம்பமும்

நாள் :- விஜயதசமி **21-10-96** திங்கள்
நேரம் :- பிற்பகல் 2 மணி

வாய்ப்பாட்டு, வீணை,
வயலின், மிருதங்கம்

ஆகிய இசைவகுப்புகள் ஆரம்பம்.

மாணவர்களையும் உறுப்பினர்களையும் இசைஆர்வலர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நா. க. பத்மநாதன் — தலைவர்
சி. பத்மலிங்கம் — செயலாளர்
சு. பாலசண்முகநாதன் — பொருளாளர்

சட்டநாதர் வீதி, நல்லூர்.

குறிப்பு:— மன்ற கலா மண்டபம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. பொது வைபவங்களுக்குப் பதிவு செய்ய விரும்புபவர்கள் முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும். (43237)


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு

எமது குழுவினால் கடந்த 13-10-1996ஆம் திகதி வடமராட்சி, தென்மராட்சி, கொக்குவில் மற்றும் நல்லூரில் நடத்தப்பட்ட நான்கு பிரிவுகளைக்கொண்ட சமய அறிவுப்போட்டியில் (எழுத்துப் பரீட்சை) மொத்தம் 1,470 மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

நான்கு பிரிவுகளிலும் முதல் ஐந்து இடங்களைப் பெற்றுக்கொண்டோர் விவரம்.

**கீழ்ப்பிரிவு:**

1 ஆம் இடம் — செல்வி அபிராமி சண்முகதாஸ், யா/வட இந்து மகளிர் கல்லூரி
2 ஆம் இடம் — செல்வி நீராஜா சிவனேசன், யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.
3 ஆம் இடம் — செல்வி தயாளினி இரத்தினவடிவேல், யா/வேம்படி மகளிர் கல்லூரி.
4 ஆம் இடம் — செல்வி சௌசல்யா விநாயகமூர்த்தி, யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.
5 ஆம் இடம் — செல்வி சிறிகாயத்ரி திருநாவுக்கரசு, யா/வேம்படி மகளிர் கல்லூரி.

தகைமை பெற்றோர் அறுவர்.

**மேற்பிரிவு:**

1 ஆம் இடம் — செல்வன் மகேந்திரராஜா பிரவீணன். யா/யூனியன் கல்லூரி.
2 ஆம் இடம் — செல்வன் கேசவன் மயூரதன், யா/பரியோவான் கல்லூரி,
3 ஆம் இடம் — செல்வன் சிவபாதரத்தினம் சிவரூபன், யா/மகாஜனக் கல்லூரி.
4 ஆம் இடம் — செல்வி பிரதீபனா சிவானந்தன், யா/இந்து மகளிர் கல்லூரி.
5 ஆம் இடம் — செல்வி சிவ அருட்செல்வி சண்முகராஜா, யா/வேம்படி மகளிர் கல்லூரி.

தகைமை பெற்றோர் ஐவர்.

**மத்திய பிரிவு:**

1 ஆம் இடம் — செல்வி அகல்யா செகராஜா, யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
2 ஆம் இடம் — செல்வி தர்ஷினி சண்முகலிங்கம், யா/வேம்படி மகளிர் கல்லூரி.
3 ஆம் இடம் — செல்வி தர்ஸாயினி வேலாயுதம், யா/வேம்படி மகளிர் கல்லூரி.
4 ஆம் இடம் — செல்வி மைதிலி மார்க்கண்டு, யா/வட இந்து மகளிர் கல்லூரி.
5 ஆம் இடம் — செல்வி சௌமினி பாலசந்திரன், யா/மகாஜனக்கல்லூரி.

தகைமை பெற்றோர் அறுவர்.

**அதிமேற் பிரிவு:**

1 ஆம் இடம் — செல்வன் சுப்பிரமணியன் நவநீதகிருஷ்ணன், யா/இந்துக் கல்லூரி.
2 ஆம் இடம் — செல்வன் பரமலிங்கம் ஜெயகுமார், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.
3 ஆம் இடம் — செல்வி இந்திராணி அமிர்தலிங்கம், யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.
4 ஆம் இடம் — செல்வி சிவப்பிரியா கதிரவேலு, யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்.
5 ஆம் இடம் — செல்வி உதயச்செல்வி சுப்பிரமணியம், யா/மகாஜனக் கல்லூரி.

தகைமை பெற்றோர் ஐவர்.

(சி/3307)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு சபைத்தலைவர் லெபெட் ரஷ்ய ஜனாதிபதியால் பதவி நீக்கம்

## பிரதமருடன் கருத்து முரண்பாடு

மொஸ்கோ, ஒக். 19

ரஷ்ய பாதுகாப்பு சபைத் தலைவர் பதவியிலிருந்து அலெக்சாண்டர் லெபெட் ஜனாதிபதி யெல்ட்ஸினால் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

அரச அமைச்சர்களுடனும், சக அதிகாரிகளுடனும் அவரால் ஒத்துப்போக முடியவில்லை என அவர் மீது குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

பிரதமர் விக்டர் செர்ணோமெதினுடன் இருந்து வந்த அதிகாரப் போட்டியே இந்தப் பதவி நீக்கத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

யெல்ட்ஸினின் வாரிசாக வருவதில் விக்டர் செர்ணோமெதின் அக்கறை காட்டி வருகிறார் எனக் கூறப்படுகிறது.

செர்ணோமெதினின் ஆதரவாளரான இராணுவ அமைச்சர் கொனிகோ அலெக்சாண்டர் லெபெட் இராணுவ புரட்சி நடத்த சதி செய்கிறார் என குற்றஞ்சாட்டி உள்ளார்.

லெபெட் பதவி நீக்கம் செய்யப்பட்டது ஐரோப்பிய அமெரிக்கத் தலைவர்களுக்கு அதிர்ச்சி அளித்துள்ளது.

பதவி நீக்க அறிவிப்பை மேற்கொள்ள தொலைக் காட்சியில் தோன்றிய ரஷ்ய அதிபர் யெல்ட்ஸின் முன்னைவிட மோசமான நோயாளியாகக் காணப்பட்டார் எனச் செய்தி நிறுவனங்கள் கூறுகின்றன.

லெபெட்டின் பதவி நீக்கத்தால் செச்சின்யப் பிரச்சினை மோசமாகலாம் எனக் கூறப்படுகிறது.

46 வயதான லெபெட்டுக்கு ரஷ்ய இராணுவத்தில் கணிசமான அளவு ஆதரவு இருந்து வருகிறது. அவர் தனது ஆதரவாளர்களை அமைதியுடன் இருக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

செச்சின்யாவில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முழுப்பொறுப்பும், அதிகாரமும் அலெக்சாண்டர் லெபட்டிடமே விடப்பட்டது.

சர்வதேச அரசியலில் அவரின் பெயர் அடிபட இதுவே முக்கிய காரணமாக இருந்தது. (இ-10)

## ஜப்பானிய பொதுத் தேர்தல்

டோக்கியோ ஒக். 19

நாளை மறுதினம் நடைபெறவுள்ள ஜப்பானிய பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி கணிசமான அளவு இடங்கலை வென்று ஆச்சரியத்தை உருவாக்கப் போகிறது என அரசியல் நோக்குநர்கள் தெரிவிக்கின்றனர். (இ-10)

## சிறையில் பிரசவம்

கெய்ரோ, ஒக். 19

போதைப் பொருள்களைப் பயன்படுத்திய குற்றத்துக்காக எகிப்தில் கெய்ரோ நகர் சிறையில் அடைக்கப் பட்டிருந்த பமீலியா முகமது சபீ என்ற 20 வயதுடைய பெண் சிறையிலேயே ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார். இக்குழந்தைக்கு 'எல் அபில்' அதாவது 'நீதி' என்று பெயரிடப்பட்டுள்ளது. (இ)

# சோமாலியாவில் மோதல் முடிவுக்கு வரும் அறிகுறி

## கென்யாவின் முயற்சி வெற்றி

சோமாலியாவில் போரிட்டு வரும் ஆயுதக் குழுக்கள் அந் நாட்டில் மோதல்களை உடனடியாக நிறுத்த உடன் பட்டுள்ளன.

கென்ய அரசுத் தலைவர் டானியல் அரப்மோவின் அழைப்பின் பேரில் சோமாலியா ஆயுதக் குழுக்களுடன் நைரோபியில் ஒரு வாரம் நடந்த பேச்சுகளில் இந்த இணக்கம் ஏற்பட்டது.

தலைநகரில் மக்கள் சுதந்திரமாக உலாவுவதற்கான அனுமதியையும், வீதிகளில் தடுப்புக்களை அகற்ற உறுதியையும் இக் குழுக்கள் வழங்கியுள்ளன.

சோமாலியாவின் யுத்த பிரபு என்று அழைக்கப்பட்டு வந்த மூகம்மது ஐடீட் சமீபத்தில் மரணமானதை அடுத்து சோமாலியாவில் சமாதானம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்திருப்பது தெரிந்ததே. (இ-10)

## உலக அரங்கில்

## ஜனாதிபதி தேர்தல் சூடு பிடிக்கிறது

வாஷிங்டன், ஒக். 19

அமெரிக்க அதிபர் தேர்தல் பிரசாரம் சூடு பிடிக்கிறது.

தற்போதைய அதிபர் கிளிங்டனும், குடியரசுக் கட்சி வேட்பாளர் பொப் டோலும் சூடான விவாதங்களை நடத்தி வருகின்றனர்.

கிளிங்டனின் தனிப்பட்ட வாழ்க்கையை விமர்சிக்கின்ற வகையில் பொப்டோல் பேசி வருகிறார். (இ-10)

## ஜோர்தான் மன்னர் மேற்குக் கரையில்

ஜெருஸயம், ஒக். 19

ஜோர்தான் மன்னர் ஹுசேய்ன் இஸ்ரேலின் மேற்குக் கரைக்கு விஜயம் செய்துள்ளார். இது 29 ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் அங்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயமாகும்.

மேலும் பலஸ்தீனியர்களின் நிர்வாகத்திலுள்ள பிரதேசமொன்றுக்கு விஜயம் செய்யும் முதலாவது அரேபியத் தலைவரும் இவராவார்.

1967 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 6 நாள் யுத்தத்தின் போது மேற்குக் கரைப் பகுதி இஸ்ரேலியர்களால் கைப்பற்றப்பட்டது.

ஜோர்தான்மன்னரும் பலஸ்தீனத் தலைவர் யாசீர் அரபாத்தும் ஹெலிக்கொப்டர் மூலம் அங்கு சென்று இறங்கினர்.

இஸ்ரேல் —பலஸ்தீன சமாதானப் பேச்சுக்கள் இழுபறி நிலையில் உள்ள இந்தவேளையில் மன்னர் ஹுசேய்னின் மேற்குக் கரை விஜயம் மிக முக்கியமானது எனக் கருதப் படுகிறது. (இ-10)

# புகைத்தலால் ஏற்படும் நுரையீரல் புற்றுநோய்

## அமெரிக்காவிலேயே அதிகரிப்பு

புகைப்பதற்கும் புற்று நோய்க்கும் உள்ள நேரடித் தொடர்பை அமெரிக்க விஞ்ஞானிகள் முதல் தடவையாக வெளிப்படுத்தி உள்ளனர்.

கலிபோர்னியாவிலுள்ள புற்று நோய் ஆய்வுக் கழகம் ரெக்சாஸ் பல்கலைக் கழகம், ஆகியவற்றைச் சேர்ந்த ஆய்வாளர்களின் கண்டு பிடிப்புப் படி, சென்ற ஆண்டில் அமெரிக்காவில் நுரையீரல் புற்று நோயால் மரணமான 420 ஆயிரம் பேரில் 90 சதவீதமானோர் புகைப் பழக்கம் உடையவர்கள் எனத் தெரிவிக்கப் படுகிறது. (இ-10)

# யாழ். ஆஸ்பத்திரியை முழுமையாக இயங்க நடவடிக்கை எடுக்கப்படும்

## பதில் துணைவேந்தரிடம் பௌசி தெரிவிப்பு

யாழ்ப்பாணம். ஒக்.19

யாழ். மாவட்ட மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலும் —யாழ் மருத்துவ பீட மாணவர்களுக்கு தேவையானபயிற்சிகளை அளிக்கக் கூடியவகையிலும்—யாழ்ஆஸ்பத்திரியை முழுமையாக இயங்க வைக்க நடவடிக்கை எடுப்பதாக சுகாதார அமைச்சர் பௌசிஉறுதி அளித்துள்ளார்.

கொழும்பு சென்றிருந்த யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளையுடன் நடத்திய இரு சுற்றுப் பேச்சுக்களையடுத்தே அவர் இந்த உறுதியை அளித்தார்.

இப்பேச்சுக்களின் போது கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த. யோகராஜனும் உடனிருந்தார்.

கட்டட வசதிகள், அடிப்படை வசதிகள், ஆளணிபற்றாக்குறை, மருத்துவ வசதிகள், வைத்திய நிபுணர் இல்லாத நிலை, மருந்து போதியளவு இல்லாமை போன்ற பிரச்சினைகளை யாழ். ஆஸ்பத்திரி எதிர்நோக்கியுள்ளது என்று துணைவேந்தர் எடுத்துக் கூறினார்.

இதற்குப் பதில் அளித்த அமைச்சர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

★ யாழ். ஆஸ்பத்திரியில் பணியாற்ற வைத்திய நிபுணர் எவராவது முன்வந்தால் உடன் அவரை அங்கு நியமிப்போம்.

★ கியூபா, இந்தியா ஆகிய இடங்களில் இருந்து வருகை தரவுள்ள டாக்டர்களை அங்கு நியமிக்கிறோம்.

★ யாழ். ஆஸ்த்திரியில் கட்டி முடிக்கப்படாத நிலையில் உள்ள ஐந்து மாடிக்கட்டடத்தை கட்டி முடிக்க கட்டடஒப்பந்தக்காரர் எவராவது முன் வந்தால் அவ்வேலையை அவரிடம் ஒப்படைத்து செயற்படுத்தலாம். (இ-3)

## நடுவர் குழுவில் சனத்!

பெங்களூர் ஒக். 19

இந்தியாவின் தென் மாநிலமான கர்நாடகத்தின் தலைநகர் பெங்களூரில் நவம்பர் மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள உலக அழகுராணிப் போட்டி நடுவர் குழுவில் சிறிலங்கா கிரிக்கெட் வீரர் சனத் ஜெயசூரியாவும் முன்னாள் உலக அழகுராணியான இந்தியாவைச் சேர்ந்த ஐஸ்வர்யாராயும் சேர்க்கப்பட்டுள்ளனர். (உ-10)

## பல்கலைக்கழகப் பிரச்சினை குறித்து கொழும்பில் பேச்சு

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகள் குறித்து யாழ். மருத்துவபீட மாணவர் குழு ஒன்று உயர் கல்வி, கல்வி அமைச்சர், சுகாதார அமைச்சர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியது.

கொழும்பில் உயர் கல்வி, கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான, சுகாதார அமைச்சர் பௌசி ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்த மாணவர் குழு பல்கலைக்கழக மாணவர்கள் கல்வி பயில போதிய வசதி செய்து தருமாறு கோரிக்கைகள் விடுத்தது.

மருத்துவபீட மாணவர்கள் தமது வைத்திய பயிற்சியைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் —

ஏனைய துறை மாணவர்கள் தமது கல்வியைத் தொடர உபகரணங்கள் இல்லாமை, போதிய ஆசிரியர்கள் இல்லாமை போன்றவற்றால் கஷ்டப்படுவதாகவும் அமைச்சர்களிடம் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## சில்லையூருக்கு கனத்தையில் சிலை

யாழ்ப்பாணம், ஒக். 19

பல்கலைவேந்தர் சில்லையூர் செல்வராஜனின் ஓராண்டு நினைவையொட்டி அவரது சிலை கொழும்பு கனத்தை மயானத்தில் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கொழும்பு மேயர் கே. கணேசலிங்கம் சிலையைத் திறந்து வைத்தார்.

ஏராளமான எழுத்தாளர்கள், கலைஞர்கள் இவ் வைபவத்தில் பங்கு கொண்டனர்.

யாழ். பல்கலைக்கழக பதில் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, கொழும்பு மேயர் கே. கணேசலிங்கம், கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் எஸ். குணரத்தினம் ஆகியோர் நினைவுரையாற்றினார்கள்.

கண்ணதாசன் மன்றத்தினர் இந்த சிலையை அமைத்திருந்தனர். (இ-3)

## மட்டுநகரில் ஆணைக்குழு விசாரணை

கொழும்பு ஒக். 19

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் காணாமற் போனோர் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு மட்டக்களப்பில் அடுத்த மாதம் 9 ஆம் திகதி முதல் விசாரணைகளை மேற்கொள்ளவிருக்கிறது.

ஓய்வு பெற்ற மேன் முறையீட்டு நீதி மன்ற நீதிபதி இ. பாலகிட்ணர் தலைமையிலான இக்குழு அங்கு 7 தினங்கள் தங்கி விசாரணைகளை மேற்கொள்ளும். (இ-3)

## வாசகர் திருமுகம்

## பாடசாலை மைதானங்கள்

வடக்கு — கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் உதவிப்பணிப்பாளர் திரு. ஏ. எஸ் குணரட்ணம் விளையாட்டு மைதானங்களை அமைக்க எடுக்கும் முயற்சி குறித்து 15-10-1996 ''உதயன்'' பத்திரிகையில் வந்த செய்தி பற்றி மகிழ்ச்சி.

ஆனால் பல பிரபல்யம் மிக்க விளையாட்டு வீரர்களை ஆக்கும் ''களம்'' பாடசாலை விளையாட்டு மைதானங்களே. அவை இன்று பயன்பாடு அற்று, பாவிக்க முடியாத அளவுக்கு சீரழியும் நிலை உதவிப் பணிப்பாளருக்குத் தெரியாதா? அல்லது அவரது அதிகாரிகளிடம் இருந்து கிடைத்த தகவல் அறிக்கைகள் இவற்றை மூடி மறைத்து விட்டனவா?

யாழ். கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய மைதானம் பலரது ஒன்றிணைந்த முயற்சி மூலம் துப்புரவு செய்யப்படுகிறது. மாறாக மத்தியகல்லூரி மைதானம் வாகனத் தரிப்பிடமாகவும், வாகன ஓடுபாதையாகவும் பயன்படுத்தப் பட்டுவருவது விளையாட்டுத்துறை அதிகாரிகளுக்கு தெரியாத ஒன்று அல்ல. யாழ். மத்தியகல்லூரி இன்றும நிமிர்ந்து நிற்கிறது என்றால் அதைவளர்த்த பெரியார்களின் அர்ப்பணிப்புகள் என்பது மட்டுமல்ல. எல்லோரும் மத்திய கல்லூரி மைதானத்தைப் பயன்படுத்தி விட்டு பெருமைகளோடு மட்டும் வெளியேறி விடுவார்கள். (கல்வித் திணைக்களம் உட்பட) என்ற நிலையும் தான் அக் கல்லூரியின் பிரபல்யத்துக்குக் காரணம் ஆகும். ஆனால் இன்றைய அவல நிலை யாருக்குப் புரியப் போகிறது?

வடக்கு — கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை உதவிப் பணிப்பாளர் நேரில வந்து இதனைப் பார்வையிட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இருப்பவற்றை அழியவிட்டு, புதியவற்றை நிர்மாணிக்கத் திட்டமிடுவது புத்திசாலித்தனமானதல்ல. பல பாடசாலை விளையாட்டு மைதானங்கள் சீர்கெட்டுள்ளன. அவற்றைத் திருத்திச் சீர்செய்த பின்னர் புதியவற்றைப் பற்றிச் சிந்திப்பதுதான் உகந்தது. அரசனை நம்பிப் புருஷனைக் கைவிடும் நிலை வேண்டாம்.

செ. செல்வராஜா

அரியாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

4' X 4' அஸ்பெஸ்ரஸ் சீலிங் சீற் விற்பனைக்கு உண்டு. வே. நவரத்தினம், 49, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். (43219)

### தவறிவிட்டது

கணேசலிங்கம் தயாவினோத்தின் 752180784 V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை சிவில் அலுவலகத்திற்கும், நாவலர் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். ''தாயகம்'' கோப்பாய் தெற்கு, கோப்பாய். (43218)

### ENGLISH

O/L ல் Distinction, Credit பெறுபேறடைய 40 நாள்களில் கற்பிக்கப்படும். (ஆண்டு 9, 10 உட்பட) Paper Class Inter Lond. ஆசிரியரால் 85, சிவன் கோவிலடி, சிவன் கோவில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (43196)

### மணமகள் தேவை

கௌரவமான குடும்பத்தைச்சேர்ந்த விவாகரத்துப் பெற்ற, 57 வயதுடையவருக்கு, நற்குணமும் நற்பழக்கங்களுமுடையமணமகள் தேவை. விவாகரத்துப் பெற்றவர்களும், தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: மே/பா இல. 547, உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 43213)

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்கு உகந்த தென்னம் நாற்றுக்கள் (பல இனங்கள்) விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. மு. காங்கேசு, ஐயா கடையடி, கண்டி வீதி, மீசாலை. (43209)

## சங்கம் மீண்டும் இயங்க ஆரம்பம்

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

கைதடி நவீல்ட் பாடசாலையில் அதன் அதிபர் திரு. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடந்த கூட்டத்தில் புதிய உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் (இ-3)

## வாழ்க்கை திறன் கல்விக்கான கருத்தரங்கு

வாழ்க்கைத்திறன் கல்விக்கான கருத்தரங்கு கீழ்க்காணும் கல்லூரிகளில் நடைபெறும்.

யாழ். கல்வி வலயம் - 2 இல் அமைந்துள்ள சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை கோட்டங்களுக்கான கருத்தரங்கு இராமநாதன் கல்லூரியிலும்—

கோப்பாய் கோட்டத்துக்கான கருத்தரங்கு நீர்வேலி, அத்தியார் இந்துக் கல்லூரியிலும்—

இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியில் இருந்து பிற்பகல் 4. 30 மணி வரை நடைபெறும். (இ)

## விண்ணப்பப் படிவங்கள்

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பட்டப் படிப்பு நெறிகளுக்கான (1996—1997 கல்வி ஆண்டுக்கு உரிய) விண்ணப்பப் படிவங்கள், அங்கீகரிக்கப்பட்ட முகவரான யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலையில், இப்போது விநியோகம் செய்யப்படுகின்றன.

---

பத்தாவது பிறந்த தின வாழ்த்து

19 — 10 — 96



செல்வன்

## பிரகாசன் புவனேஸ்வரன்

(உடுவில் மகளிர் கல்லூரி மாணவன்)

உடுவில் டச்றோட்டை சேர்ந்த புவனேஸ்வரன-இலட்சுமிதேவியின் அன்பு மகன் பிரகாசன் தமது பத்தாவது பிறந்த தினத்தை அவரது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்புள்ள அம்மா அண்ணா, அக்கா, அப்பப்பாமார், அப்பம்மாமார், ஐயா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமா, அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், அத்தான்மார் மற்றும் அக்காமார், அண்ணாமாரான உறவினர் எல்லோரும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்

[8920] தாய், சகோதரர்

---

## MODERN EDUCATION CENTRE

KARAVEDDY

### G. A. Q. வகுப்புகள்

பிரபல ஆசிரியர்களுடன் ஆரம்பமாகின்றன

அனுமதிகளை 21 - 10 - 1996 இற்கிடையில் பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

—★— —★— —★—

நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன

### 97 பகல்நேர வகுப்புகள்

இரசாயனவியல்: திரு. வசீகரன்

வெள்ளிக்கிழமை காலை 6-45 மணி.

தூய / பிரயோக ]-கணிதம்: திரு. வெக்ரர் வேலாயுதம்

வெள்ளிக்கிழமை காலை 8-00 மணி.

பௌதிகவியல்: திரு. சூரியநாதன்

— நிர்வாகி

(சி/3297)

---

## பிறந்த நாள் நினைவு

பிறப்பு: 19 — 10 — 1916



இறப்பு: 06 — 02 — 1994

அமரர் பல்கலைப்புலவர்

### க. சி. குலரத்தினம் அவர்கள்

அறிவுச் சிறப்பும் புதுமை நலமும் ஆய்வுப் பாங்கும் பெற்று
மறைந்துள்ள உண்மைகளை மலர்த்தி- தமிழ்மொழியில்
இல்லாதவை தந்தும் பல்கலைப் புலவோய்.

நெஞ்சில் நிறைந்தாய்
நினைவில் நிலைத்தாய்

தேசாபிமானி

க. கனகராசா.

பிக்னவைத நிறுவனர்.

(சி-3274)

---

## BITSMANS

கல்வி நிறுவனம் மானிப்பாய்.

A/L 97 ★ கலை, ★ வர்த்தகம்

DAY CLASS

| | |
|---|---|
| ★ பொருளியல் சண் | ★ கணக்கியல் N. ராஜன் |
| ★ வர்த்தகம் பிரபல ஆசிரியர் | ★ அளவையியல் R. P. சர்மா |
| ★ தமிழ், இந்து நாகரிகம், இந்து சமயம் N. பாலா | ★ நாடகமும் - அரங்கியலும் ஸ்கந்தவேள் |

ஆரம்பம்: 23—10—96

[43227] புதன் காலை 8. 00 மணி

---

தொழில்நுட்பக்கல்லூரி- யாழ்ப்பாணம்

## இறுதிப் பரீட்சை - 1996

உயர் தேசிய வணிக டிப்பிளோமா
(புதிய பாடத்திட்டம்) 2 ஆம் வருடம். ட / 182

மேற்படி இறுதிப்பரீட்சை 21-10-96 தொடக்கம் 28 - 10 - 96 வரை யாழ்/ இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். பரீட்சை அனுமதி அட்டை 21-10-96 அன்று காலை 7-30 மணி தொடக்கம் யாழ்/ இந்து மகளிர் கல்லூரியில் வணிகப் பகுதித் தலைவரால் வழங்கப்படும்.

க. ஜெயரத்தினம்
பதில் - அதிபர்

தொழில்நுட்பக்கல்லூரி,
யாழ்ப்பாணம்,
1996 - 10 - 18 (சி-3303)

---

## அறிவித்தல்

### செவிப்புலனற்றோர் விசேட அடையாள அட்டை

பெறுவதற்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கும், பிற்பகல் 2-00 மணிக்கும் இடையே 2 புகைப்படப் பிரதிகளுடன் அலுவலகத்தில் சந்திக்கவும்.

சே. செல்வக்குமார்

செயலாளர், செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம், கில்னர் கட்டடம், 426, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(43223)

---

## ஈசன் கல்வி நிலையம்

கே. கே. எஸ். றோட், கோண்டாவில்

### G. A. Q., B. A., First in Com வகுப்புகள்

| | |
|---|---|
| தமிழ் | திரு. அருந்தவநாதன் |
| பொருளியல் / அரசியல் ] | திரு. குமாரவேல் |
| அளவையியல் / மெய்யியல் ] | திரு. யுகபாலசிங்கம் |
| இந்துநாகரிகம் | திரு. சிவாநந்தன் |
| ஆங்கிலம் | திரு. பிறீட்டோ |

ஆரம்பம்: 20 — 10 — 96 ஞாயிறு
பிற்பகல் 3-00 மணி

(43215)

---

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் ஆறுமுகம் கந்தையா

(பிரபல வர்த்தகர், கைதடி.)

எமது அன்பன் ஆ. க. சின்னத்தம்பியின் [அண்ணாத்துரை, கைதடி] தந்தையாரின் மறைவு குறித்து அதிர்ச்சி அடைகிறோம். இவ்வேளையில் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கிறோம்.

V. S. B. குறூப் பங்காளரும்,
ஊழியர்களும்,
ஜெசிபா ஏஜன்சி ஊழியர்களும்.

275, 277 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (43228)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மாற்றிக் கொள்க

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இப்போது சுமார் நான்கரை இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள் என்பது அரசாங்க அதிபர் வெளியிட்ட உத்தியோக பூர்வமான புள்ளி விவரம்.

இவர்களுக்கு மாதாந்தம் 12,000 மெற்றிக் தொன் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் (அரிசி, மா, சீனி, பருப்பு) தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இப்போது வந்து சேர்வதும், விநியோகிக்கப்படுவதும் 5,000 மெற்றிக் தொன்கள் மட்டுமே,

வட மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் தலைவர் சோமபால குணதீரா இந்தத் தகவலைக் கொழும்பில் வெளியிட்டிருக்கிறார்.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விநியோகத்திலாவது நிறைவு காண முடியாத நிலைமை இது.

குடா நாட்டுக்கு அரசு தருவிக்கும் பொருள்கள் காங்கேசன் துறைமுகத்திற்கே எடுத்து வரப்படுகின்றன. ஆனால் அங்கு பெரிய கப்பல்களில் பொருள்களை எடுத்துச் சென்று இறக்க முடியாது. அதனால் காங்கேசனில் புதிய இறங்கு துறை நிர்மாணிக்கப்பட உள்ளது.— என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியாமைக்கு அவர் கூறும் காரணங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவையே. ஆனால் ஐயர் வரும்வரை அமாவாசை பார்த்திருக்கும் ஒரு நிலையில் மக்களை வைத்திருப்பது உகந்ததல்ல.

வடபகுதி மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருந்த காலத்தில் — ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் — குடாநாடு தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் — இப்பகுதி மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களில் 33 சதவீதம் வந்து சேர்ந்ததை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

அப்போதைய 33 வீதத்துக்கும் இப்போதைய 41 வீதத்துக்கும் மிகபெரிதாக வித்தியாசத்தைக் காண முடியவில்லை. அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கே இந்த நிலையானால், ஏனைய பாவனைப் பொருள்கள் மக்களுக்கு இன்னும் போதியளவில் கிடைக்கவில்லை என்பதாகும்.

இது ஓர் அதிருப்தி நிலையாகும். குடா நாட்டு மக்களின் வாழ்க்கை இப்போதைக்கு இயல்பு நிலைக்கு திரும்ப மாட்டாது என்பதனையே இது கோடிட்டுக் காட்டுகிறது. எனவே முன்னேற்றகரமற்ற இப்போதைய நிலையைப் போக்குவதற்கு அரசு தீவிரமாகவும் அக்கறையாகவும் வேகமாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குடாநாட்டு மக்கள் தமது சொந்த வதிவிடங்களைவிட்டு இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்து இன்னும் இரண்டொரு நாள்களில் ஆறு மாதங்கள் முடிவடைகின்றன. அவர்களது தேவைகளை நிறைவேற்றும் விடயம் இன்னமும் பழைய சந்தியிலேயே நிற்கிறது!

இது யாழ்ப்பாணக் குடாநாடு குறித்து, அரசு செய்யும் பிரசாரத்துக்கும் உண்மை நிலைக்கும் இடையேயான பெரும் இடைவெளியைக் காட்டுகிறது இது எந்த வகையிலும் ஆரோக்கியமானதல்ல.

பிரசாரத்துக்கு முதல் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டும். அதுவே அவசியம்; பின்னரே பிரசாரம் என்று மாற்றிக்கொள்ள வேண்டும்.

# முல்லைக்கு நேர்ந்த கதி ஏற்படுவதை தவிர்க்கவே பூநகரி முகாம் மூடப்பட்டது

## இராணுவ வட்டாரங்களை ஆதாரங் காட்டித் தகவல்

கொழும்பு, ஒக். 19

முல்லைத்தீவு இராணுவ முகாம் மீது கடந்த ஜூலை மாதம் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது போன்ற தாக்குதல் மீண்டும் மேற்கொள்ளபடுவதைத் தவிர்ப்பதற்காகவே பூநகரி இராணுவ முகாமை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

மேற்கண்டவாறு இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சுமார் ஆயிரத்து 500 படையினரைக் கொண்டிருந்த பூநகரி முகாமை மூடுவது குறித்து அண்மைக் காலமாக ஆராயப்பட்டே வந்தது.

வன்னிப் பெருநிலப் பரப்பில் பரந்தனுக்கு மேற்கே இராணுவத்தினர் நகர்ந்திருப்பதனாலும் —

யாழ். குடாநாட்டைப் படையினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளதாலும் — பூநகரி முகாமை தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டிய தேவை குறைந்து விட்டது என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

யாழ். குடா நாட்டையும், வன்னி நிலப்பரப்பையும் இணைக்கும் மார்க்கத்தில் கரையோரமாக அமைந்திருந்த பூநகரி முகாமுக்கான விநியோகங்களைச் செய்வதற்கு யாழ். கடலேரி மட்டுப் படுத்தப்பட்ட அளவிலேயே பயன் படுத்தப்பட்டு வந்தது.

விநியோகங்கள் பிரதானமாக விமானங்கள் மூலமே கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருந்தன.

இந்த அம்சமும் அந்த முகாம் மூடப்பட்டதற்கான காரணங்களில் ஒன்றாகும் என்றும் கூறப்படுகிறது:

1993 நவம்பரில் பூநகரி முகாம் மீது புலிகள் மேற்கொண்ட பாரிய தாக்குதலில் 650 க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு இராணுவ முகாம் மீது கடந்த ஜூலையில் புலிகள் மேற்கொண்ட தாக்குதலையடுத்து —

அது போன்று தனியான இடத்தில் அமைந்திருக்கும் ஏனைய முகாம்களின் பயன்பாடுகள் குறித்து இராணுவ தலைமைப் பீடம் அண்மைக் காலமாக மீள் பரிசீலனை செய்து வந்தது.

இப்படி அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (இ-3)

# வன்னியில் மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு

## மலேரியா வேகமாகப் பரவுகிறது

வவுனியா, ஒக். 19

வன்னிப்பகுதிக்கு மருந்துப் பொருள்களைச் சுதந்திரமாக எடுத்துச் செல்வதற்கு அரசாங்கம் இன்னும் அனுமதி வழங்காமல் இருக்கிறது. நுண்ணுயிர் கொல்லி மருந்து வகைகள் தொடக்கம் சகல வகையான அடிப்படை மருந்துகளுக்கும் அங்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றது.

எம். எஸ் எவ் என்னும் பிரெஞ்சு வைத்தியக் குழுவின் ஒருங்கிணைப்பாளரான பிரான்செஸ் ஸ்ரீவென்சன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வன்னிப்பகுதியில் மலேரியா நோயே மிகவும் வேகமாகப் பரவி வருகிறது. மலேரியா தடுப்பு மருந்துகள் போதியளவில் கிடைக்கா விட்டால் பாரதூரமான நிலைமை அங்கு உருவாகும் என்றும் அவர் கூறினார்.

வன்னியில் பாரதூரமான போசாக்கின்மையை அவதானிக்க முடியவில்லை என்று தெரிவித்த அவர், மருந்து நிலைமையே மோசமாகியுள்ளது என்றார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குத் தேவையான மருந்து வகைகள் வவுனியாவில் உள்ளன. பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம் கிடைக்காததால் அவற்றை அங்கு எடுத்துச் செல்ல முடியாதுள்ளது என்று வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் அமைச்சு கூறுகிறது.

பாதுகாப்பு அமைச்சில் வழமையாக நடைபெறும் கூட்டம் ஒன்றிலேயே முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கு மருந்து கொண்டு செல்வதற்கு அங்கீகாரம் வழங்கப்படுவது வழக்கம் என்றும் —

வன்னிப்பகுதியில் இருந்து வரும் இராணுவத்தால் நியமிக்கப்பட்டுள்ள வைத்திய அதிகாரியே மருந்துகளை எடுத்துச் செல்வது வழக்கம் என்றும் —

கிளிநொச்சி சண்டை ஆரம்பமான பின்னர் அந்த வைத்திய அதிகாரி வராததால் இரண்டு மாதங்களாக பாதுகாப்பு அமைச்சு கூட்டம் நடைபெறவில்லை என்றும் — அந்த அமைச்சு மேலும் தெரிவித்தது.

## கச்சாய் உப அஞ்சலகம்

கச்சாய் உப அஞ்சலகம் இம் மாதம் 7 ஆம் திகதியிலிருந்து சாவகச்சேரி கச்சாய் வீதியில் கண்ணகை அம்மன் கோயிலுக்கு அருகாமையில் தற்காலிகமாக இயங்க ஆரம்பித்துள்ளது.

இத் தபாலகத்தில் ஏற்கனவே பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெற்று வந்தவர்களுக்கு ஜூலை, ஒகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கான கொடுப்பனவுகள் இங்கு வைத்து தற்பொழுது வழங்கப் படுவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-4)

# 25 சத வீதமான மருந்தே தற்போது வன்னிப்பகுதிக்கு

கொழும்பு, ஒக். 19

முல்லைத்தீவுக்கும் கிளிநொச்சிக்கும் அனுப்பப்பட வேண்டிய மருந்துப் பொருள்களின் அளவை பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளே தீர்மானிப்பார்கள். ஏனெனில் இந்த இரு மாவட்டங்களுக்கும் அனுப்பப்படும் மருந்துப் பொருள்களில் பெரும் பகுதி விடுதலைப் புலிகளின் கைக்குச் சென்றடைகிறது என்பதே அவர்களின் கணிப்பு.

மேற்கண்டவாறு இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்ததாக ''சண்டே ரைம்ஸ்'' ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கான மருந்துக் கோட்டாவில் 75 சதவீத குறைப்பு செய்யப்பட்டிருப்பதாக சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும், தொண்டர் நிறுவனங்களும் தெரிவித்து வருகின்றன.

இந்த இரு மாவட்டங்களுக்கும் மருந்துப் பொருள்களை எடுத்துச் செல்ல பிரெஞ்சு மருத்துவக் குழுவான எம். எஸ். எவ். எடுத்த முயற்சியும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடையாததால் தடைப்பட்டுள்ளது.

எனினும் இந்த மாவட்டங்களுக்கான மருந்து விநியோகத்தில் தாம் குறைப்புச் செய்யவில்லை என்று பாதுகாப்புஅமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அப்படி தாம் [illegible] நலன் கருதியே நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இப்படி அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது. (இ)

# திருமலையில் குடும்பஸ்தர் மர்ம மரணம்

மட்டக்களப்பு, ஒக். 19

வாழைச்சேனையை அடுத்த கும்புறுமூலை இராமத்தைச் சேர்ந்த நீலக்குட்டி கனகலிங்கம் (26 வயது) என்ற குடும்பஸ்தர் திருகோணமலைக்குச் சென்ற வேளை மர்மமான முறையில் மரணமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கற்குடா பொலிஸாருக்கு உடைகளைச் சலவை செய்யும் தொழிலில் ஈடுபட்டு வந்த இவர் தொழில் செய்வதற்காக திருகோணமலைக்கு சென்ற வேளையில் அங்கு கைது செய்யப்பட்டதாகவும்-

பின்னர் அவரது சடலம் திருமலை ஆஸ்பத்திரியில் இருந்து உறவினர்களால் பொறுப்பேற்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# இன்றும் நாளையும் கடைகள் திறக்கும்

நவராத்திரி தினத்தை முன்னிட்டு யாழ். வர்த்தகர் சங்க எல்லைப் பரப்பினுள் இயங்கும் வர்த்தக நிலையங்கள் யாவும் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக் கிழமையும் முழு நேரமாகத் திறந்து வியாபாரம் நடைபெறும் என்று யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

# பூநகரியில் புலிகள் முகாம் நிறுவத் திட்டம்

படையினரால் விட்டுச் செல்லப்பட்ட பூநகரியில் முகாம் ஒன்றை அமைக்க விடுதலைப் புலிகள் திட்டமிட்டு வருவதாக தகவல் கிடைத்திருப்பதாக இராணுவ உளவு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

''சண்டே ரைம்ஸ்'' ஆங்கில வார இதழ் மேற்கண்டவாறு செய்தி வெளியிட்டுள்ளது.

பூநகரியில் புதிய முகாம் ஒன்றை நிறுவுவதன் மூலம் சூரியப் பிரகாசம் இராணுவ நடவடிக்கையின்போது ஏற்பட்ட இழப்பை ஈடு செய்ய முடியும் என்று விடுதலைப் புலிகள் நம்புகிறார்கள் என்றும் —

குடாநாட்டின் மீது தாக்குதல்களை நடத்துவதற்கு பூநகரி ஒரு பொருத்தமான இடம் என்பது அவர்களின் அவதானிப்பு என்றும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரியைச் சுற்றி விடுதலைப் புலிகள் நிலக்கண்ணிகளை புதைப்பதாகவும் இராணுவ உளவுச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

# அழுத்தம் காரணமாகவே செய்தித் தணிக்கை நீக்கம்

## ஐ.தே. கட்சி கூறுகிறது

கடந்த ஆறுமாத காலமாக அமுலில் இருந்த இராணுவச் செய்திகள் மீதான செய்தித் தணிக்கையை அரசாங்கம் தற்போது நீக்கி உள்ளது. அடுத்த மாதம் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பாரிஸில் நடைபெற இருக்கிறது. செய்தித்தணிக்கையை நீக்குமாறு உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து நிர்ப்பந்தம் வரும் என எதிர்பார்த்தே அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்தது.

செய்தித் தணிக்கை நீக்கம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

பாதுகாப்பு இரகசியங்கள் விடுதலைப்புலிகளுக்குச் சென்றுவிடக் கூடாது என்று காரணம் காட்டியே செய்தித் தணிக்கை கொண்டுவரப் பட்டது.

ஆனால் வெளிநாட்டுச் செய்தி ஸ்தாபனங்கள் மூலம் முல்லைத்தீவு சம்பவம் உட்பட படையினர் சம்பந்தப்பட்ட சகல நடவடிக்கைகளும் தகவல்களும் பொதுமக்களுக்குக் கிடைக்கத்தக்கதாக இருந்தன.

எனவே இந்தப் பத்திரிகைத் தணிக்கை வெறும் கேலிக் கூத்து என்று ஐ.தே.க பேச்சாளர் கருணசேன கொடித்துவக்கு தெரிவித்தார். (இ)

## நாளை

ஐப்பசி 4

ஞாயிற்றுக்கிழமை

திதி: அட்டமி முற்பகல் 9.50 வரை.

நட்சத்திரம்: உத்தராடம் முற்பகல் 11.38 வரை.

ராகுகாலம்: 4.32-6.02

சுபநேரம்: 9.02—10.32

சரஸ்வதி பூசை

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# மாணவருக்கான இலவச சீருடை

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடை விநியோகம் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலவச சீருடைகள் ஏற்கனவே கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து விட்டன.

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் 87ஆயிரம் மாணவர்கள் தற்சமயம் கல்வி கற்கிறார்கள். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

சனி, ஞாயிற்றுக்கிழமை 19, 20 - 10 - 96 சரஸ்வதி பூஜையை முன்னிட்டு சகல வர்த்தகஸ்தாபனங்களும் திறந்து வியாபாரம் செய்யலாம்.

V. S. பாலச்சந்திரன்
தலைவர்.

பா. லிங்கநாதன்
செயலாளர்.

**யாழ்ப்பாணம் வணிகர் மன்றம்**

(43229)


# மரண அறிவித்தல்கள்

## தில்லையம்பலம் கனகரத்தினம்
(ஊரெழு)

தில்லையம்பலம் கனகரத்தினம் (இளைப்பாறிய ஊழியர் நீர்விநியோக இலாகா திருகோணமலை) 18-10-96 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் அமுதரத்தினத்தின் அன்புக் கணவரும், கங்காதேவி (மலேசியா), சற்குணதேவி (சிங்கப்பூர்), சண்முகநாதன் (ஊரெழு கட்டட ஒப்பந்தகாரர்), குகதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ் சென்ற கந்தையா (ஊரெழு), திருமதி சிவஞானம் (மலேசியா) ஆகியோரின் சகோதரரும், புவனேந்திரன் (மலேசியா), ஸ்ரீகரன் (சிங்கப்பூர்), ஜெயமலர் (நந்தா), அழகேஸ்வரி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19-10-96) சனிக்கிழமை மூற்பகல் 10 மணிக்கு ''நந்தவனம்'' ஊரெழு கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பொக்கணை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்டர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
க. சண்முகநாதன்
(மகன்)

''நந்தவனம்''
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

(43220)

## வேலாயுதம் அருட்பிரகாசம்
(நயினாதீவு)

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வேலாயுதம் அருட்பிரகாசம் அவர்கள் 17-10-1996 அன்று யாழ்ப்பாணத்தில் காலமாகி விட்டார்

இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும், அமுதகௌரி, கனகநாயகம் (சுவிஸ்), ஜெயலட்சுமி (சுவிஸ்), ஸ்ரீ உமாதேவி (சுவிஸ்), செந்தில்நாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், மனோகரன் (அரச மரக்கூட்டுத்தாபனம், மன்னார்), யோகராணி (சுவிஸ்), மகேஸ்வரன் (சுவிஸ்), விஜயகுமார் (சுவிஸ்), தயாநிதி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பரமலிங்கம், வீரவாகு மற்றும் கனகரெத்தினம், வள்ளிப்பிள்ளை, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆரணி, ரமினா, பிரதா, பிரிஜந், ஆர்த்திகா, பிரியங்கா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இறுதிக்கிரியைகள் நயினா தீவில் இன்று(19-10-96) நடைபெறும்.

தகவல்:
நா. கோபாலகிருஷ்ணன்

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(43230)

## கண்ணுச்சாமி சந்தானகிருஷ்ணன்
(நாதஸ்வர இசைமணி)

நல்லூர் சட்டநாதர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாதஸ்வர இசைமணி கண்ணுச்சாமி சந்தானகிருஷ்ணன் அவர்கள் 17 - 10 - 96 வியாழக்கிழமையன்று சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற கண்ணுச்சாமி — தங்கமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், கண்ணதாசன் (பிரான்ஸ்), சத்தியசீலன் (பிரான்ஸ்), திருமதி ஜெயந்தி ஸ்ரீதரன் (கனடா), ஜெயசீலன் (நெதர்லாந்து), பிரேமதாசன், தயானந்தி, துஷ்யந்தி (கனகரட்ணம் ம.ம.வி மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீதரன் அவர்களின் அன்பு மாமனாரும், திவ்யா அவர்களின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் (18 - 10 - 96) நேற்று நடைபெற்று பூதவுடல் மாலை 3 மணியளவில் செம்பாடு இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
ச. பிரேமதாசன்
(மகன்)

இல. 908, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(43236)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/3 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 19-10-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


### வடக்கு-கிழக்கு இணைந்த மாகாணத்தில்

# முஸ்லிம்களுக்கு புறம்பான அலகு அமைப்பதை ஈ.பி.டி.பி. எதிர்க்காது

## அமைச்சர் அஷ்ரப் தகவல்

கொழும்பு ஒக். 19

வடக்கு—கிழக்கு இணைந்த மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு உப—சுயாட்சி அலகு ஒன்றை அல்லது புறம்பான அலகு ஒன்றை வழங்குவதை தமது கட்சி எதிர்க்கமாட்டாது என்று ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப்பிடம் உறுதியளித்துள்ளார்.

ஜேர்மனியில் இரு கட்சித் தலைவர்களுக்குமிடையே நடந்த பேச்சுவார்த்தையின் போது ஈ.பி.டி.பி. தலைவர் இதனைத் தெரிவித்தார் என்று எட்டுநாள் ஜேர்மன் விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய அமைச்சர் அஷ்ரப் கூறினார்.

ஜேர்மன் சமஷ்டி நடைமுறை பற்றி நேரில் கண்டறிவதற்காக அமைச்சர் அஷ்ரப் தலைமையில் அங்கு சென்ற தூதுக்குழுவில் டக்ளஸ் தேவானந்தாவும் இடம்பெற்றிருந்தார்.

அப்போதே இவர்கள் பேச்சு நடத்தினர்.

(இ-3)

## முன்னாள் அமைச்சர் பிணையில்

சென்னை, ஒக்.19

விஜயன் மீதான தாக்குதல் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் மாநில அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம் 10 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல நேற்று சென்னை நீதிமன்றம் அனுமதித்தது.

(ஞ-3)

## மட்டக்களப்பில் தாக்குதல்

கொழும்பு, ஒக். 19

மட்டக்களப்பு மாவட்டம், கொம்மாந்துறையில் உள்ள இராணுவ காவலரண் மீது நேற்று முன்தினம் காலை விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

காலை 9 30 மணிக்கு இடம்பெற்ற இத்தாக்குதலில் இராணுவத்தினர் ஒருவரும், பொதுமகன் ஒருவரும் காயமடைந்தனர். எனப் பொலீஸார் தெரிவித்தனர். (இ-3)

## திங்கள் முதல் ம. எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம் ஒக்.19

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் யாழ். பிரதேச செயலக பிரிவைச்சேர்ந்த ஒவ்வொரு குடும்பத்துக்கும் கூட்டுறவுச் சங்கக் கடைகள்மூலம் 3 லீற்றர் வீதம் மண் எண்ணெய் வழங்கப்படவிருப்பதாக பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

பிரதேச செயலக பிரிவில் உள்ள வாகன உரிமையாளர்கள், திணைக்களங்கள், சிறு கைத்தொழில் நிறுவனங்கள், ஜெனரேட்டர் உரிமையாளர்கள் தங்களது வதிவிட குடும்பப் பதிவையும், ஏனைய ஆதார ஆவணங்களையும் சமர்ப்பித்து தமக்குத் தேவையான மண் எண்ணெயைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

(இ-3)

## இனவாதப்போரை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லிகா டி சில்வா தெரிவித்தார்.

நாட்டைப் பாதுகாப்பதற்கு இராணுவத்தில் வந்து சேருமாறு இராணுவத் தளபதி றொஹான் தலுவத்த நேற்று முன்தினம் விடுத்த அழைப்பில் இனவாதச்சாயல் தென்படுவதாகவும் அவர் கூறினார்.

இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்குப் பதிலாக, ''மக்களின் ஒத்துழைப்பைப் பெற்று அவர்களின் விருப்பத்துடன்தான் யுத்தம் நடத்துகிறோம்'' என்று படை அதிகாரிகள் காரணம் கற்பிக்கிறார்கள்.

சிங்கள இளைஞர்களை இராணுவத்தில் சேருமாறு விடுத்த வேண்டுகோள் மூலம் இராணுவத் தளபதி இனவாத உணர்வைத் தூண்டுகிறார்.

''இனத்துக்காக உயிர்த்தியாகம் செய்த மத்தும பண்டார போன்ற இளைஞர், யுவதிகளே எங்களுடன் இணையுங்கள்'' என்ற அடிப்படையில் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சில வாரங்களுக்கு முன்னர் ''லங்காதீப பத்திரிகையில் கடற்படையின் விளம்பரம் ஒன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது, அதில் ''வீர பரம்பரையில் வந்தவர்களே எங்களுடன் இணையுங்கள்'' எனப் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

நாங்கள் இந்த விளம்பரம் குறித்து எங்கள் கண்டனத்தைத் தெரிவித்தோம். நாட்டின் இளைஞர், யுவதிகளின் பரம்பரையைக் கொல்லும் அல்லது அங்கவீனர்களாக்கும் இந்த யுத்தத்தை நிறுத்தி இனப்பிரச்சினைக்கு கௌரவமான தீர்வு காணவேண்டும்.

இப்படி மங்கலிகா டி சில்வா மேலும் தெரிவித்தார் என பி. பி. ஸி கொழும்பு செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ கூறினார்.

## யாழ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரமலிங்கம் (வயது 54) ஆகியோர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

கொட்டடியைச் சேர்ந்த சரவணமுத்து கந்தசாமி (வயது 64), கொக்குவிலைச் சேர்ந்த இரத்தினசிங்கம் ராஜன் (வயது 41), யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த கணேசலிங்கம் கோபிதன் (வயது 23) ஆகியோர் யாழ். ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பகுதியில் சிகிச்சை பெற்றுச் சென்றனர்.

இச்சம்பவத்தில் பொலீஸார் ஒருவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும், அது ஊர்ஜிதம் செய்யப்பட வில்லை.

(இ-15)

## இராணுவத்தினரின் ,,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரஜினி விவகாரம் குறித்து நேற்று வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையின் முழு விவரமும் வருமாறு:-

உரும்பிராயைச் சேர்ந்த ரஜினி வேலாயுதபிள்ளை (வயது 22) சில நாள்களுக்கு முன்னர் மிகவும் மர்மமான முறையில் திடீரென்று காணாமல் போயிருந்தார்.

இவரது மறைவு குறித்து பலவிதமான ஊகங்களும் வதந்திகளும் பரவியிருந்தன. இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் உருவாகியிருந்தது.

சில வாரங்களுக்கு முன்னர் இங்கு பதவியேற்ற மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவின் கவனத்துக்கு இது கொண்டு வரப்பட்டது.

அவர் உடனடியாக நடவடிக்கை எடுத்தார். விசாரணைகள் மிக்க கவனத்துடனும் வேகத்துடனும் மேற்கொள்ளப்பட்டன.

### நீதிமன்றத்தில் ஆஜர்

தற்போது ஆறு இராணுவ வீரர்கள் யாழ். நீதிவான் முன் நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும் விசாரணைகள் பூர்த்தியாகும் வரை இவர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

காணாமற்போனரஜினியின் உடல் மீட்கப்பட்டு, சாவுக்கான காரணத்தையும் சூழ்நிலைகளையும் ஆராய்வதற்காக கொழும்புக்கு அனுப்பப் பட்டுள்ளது.

### தண்டனை வேண்டும்

மேற்படி இராணுவ வீரர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் உண்மையாக இருக்கும் பட்சத்தில், அவர்களது நடத்தையை தாங்கள் மிகவும் கண்டிப்பதாகவும் —

இத்தகைய மிருகத்தனமான செயல்களுக்கு மிகவும் கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டுமென தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் —

பெரும் எண்ணிக்கையான இராணுவ வீரர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவினரிடம் இது பற்றி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா கூறியதாவது:

''இராணுவ வீரர்கள் மத்தியில் எந்தவிதமான ஒழுங்கீனத்தையும் கெட்ட நடத்தையையும் நான்பொறுத்துக கொள்ள மாட்டேன். குற்றம் செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைக் கண்டு பிடித்து விசாரணைக்கு நிறுத்துவதில் நான் மிகவும் கண்டிப்பாக இருப்பேன்.

''பொதுமக்களின் சுமுகமான நல்வாழ்வே எனது குறிக்கோள். பொதுமக்கள் தங்களுக்கு ஏற்படும் எந்த வகையான தொந்தரவுகளையும் என்னிடம் முறைப்பாடு செய்யலாம், உடனடி நடவடிக்கை எடுக்க நான் எதுவித தயக்கமும் காட்டமாட்டேன்''

— இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

## சிவராத்திரி,..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சில்வா, நீதியரசர்களான ஏ. இராமநாதன், ஏ. எஸ். விஜயதுங்க ஆகியோர் இம்மனுவை விசாரணைக்கு எடுக்க அனுமதி வழங்கினார்கள்.

(இ-3)

## காணாமற்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புடன் ஈடுபட்டு, ஓய்வினை நெருங்கிக் கொண்டிருக்கும் காலத்தில் அவருடைய குடும்பத்துக்கு நேர்ந்த கதியினையிட்டு தமது அதிர்ச்சியையும் கவலையையும் வெளியிட்டுள்ள அவர்கள், பொறுப்பு வாய்ந்த அமைச்சர் என்ற ரீதியில் இதில் தலையிட்டு ஆவன செய்ய வேண்டும் என்று கோரியுள்ளனர்.

(இ-3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org